விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 17 சனிக்கிழமை (31.03.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 102

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்திலேயே முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# விடுதலைப்புலிகளின் விமானப் படையால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் இருக்காது

## துப்பாக்கிச் சூட்டில் குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நேற்றுப்பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச் சம்பவத்தில் என்.கிருஷ்ணராஜா (வயது-38) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-3)

## தமிழக நாளேட்டுக்கு தமிழ்ச்செல்வன் பேட்டி

(கிளிநொச்சி)

**விடுதலைப்புலிகளின் வான்படையால் இந்தியாவிற்கு ஒருபோதும் அச்சுறுத்தல் எதுவுமில்லை என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு பிரிவின் உத்தியோகபூர்வ நாளேடான ஜனசக்திக்கு அவர் வழங்கியுள்ள நேர்காணலிலேயே இதனைத் தெரிவித்தார். இலங்கை இராணுவத்தினருக்கு எதிராகவே விடுதலைப் புலிகளின் விமானப் படை செயல்படும். அவை ஒருபோதும் இந்தியாவுக்கோ ஏனைய நாடுகளுக்கோ அச்சுறுத்தலாக இருக்கப் போவதில்லை என அவர் கூறியுள்ளார்.**

(04 ஆம் பக்கம் பார்க்க)

## பரா வெளிச்சத்தில் விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, மாத்தளன், கேப்பாப்புலவு ஆகிய பகுதிகள் மீது நேற்றிரவு அரச வான்படைக்குச் சொந்தமான மிக்-27ரக வானூர்திகள் இரண்டு குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

இரவு 8.10 மணியளவில் பரா வெளிச்சக்குண்டுகளை ஏவி அந்த ஒளியில் குண்டுகளை மிக்-27ரக வானூர்திகள் வீசியுள்ளதாக செய்திகள் தெரிவித்தன. இதில் ஏற்பட்ட சேத விபரங்கள் எதுவும் வெளியாகவில்லை. (ச)

## நாடளாவிய ரீதியில் விசேட பாதுகாப்பு

### நாளை முதல் அமுல்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை விஸ்தரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் நாளையிலிருந்து அமுலுக்கு வரவுள்ளதாகப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயந்த விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் சகல பிரிவிலுள்ள பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு உரிய பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## நீர்மூழ்கிக் கப்பலை கொள்வனவு செய்வதற்கு புலிகள் திட்டம்

(சென்னை)

விமானத் தாக்குதலை நடத்தியுள்ள விடுதலைப்புலிகள் நீர்மூழ்கிக்கப்பலை கொள்வனவு செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக இந்திய பத்திரிகையொன்று பரபரப்பு தகவல் வெளியிட்டுள்ளது. இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; விமானத் தாக்குதலையும் தங்களால் நடத்த முடியும் என்பதை கடந்த வாரம் விடுதலைப்புலிகள் நிரூபித்துள்ளனர்.

இந்நிலையில் நீர்மூழ்கிக் கப்பல் வாங்குவதற்கான முயற்சியிலும் அவர்கள் ஈடுபடலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. இது குறித்து புதுடில்லியில் இந்தியக் கடற்படையின் உதவித் தலைமைத் தளபதி றியர் அட்மிரல் (04 ஆம் பக்கம் பார்க்க)

## விமான குண்டுவீச்சின் உண்மைகளை மூடி மறைப்பதற்கு அரசாங்கம் முயற்சி

### லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படை தளத்தின் மீது விடுதலைப் புலிகள் அண்மையில் மேற்கொண்ட இலகுரக விமான குண்டு வீச்சு தொடர்பான உண்மைகளை அரசாங்கம் மூடி மறைப்பதற்கு முயற்சி செய்கிறது. அதனால்தான் பாராளுமன்றத்தை கூட்டுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

உண்மைகளை மூடி மறைப்ப (04 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத்தில் சிறுவர்கள் பாதிப்பு

(மட்டக்களப்பு)

மோதல்கள் தீவிரமடைந்துள்ள கிழக்கு மாகாணத்தில் சிறுவர்கள் மிக மோசமாக பாதிப்படைந்துள்ளதாக தெரிவித்துள்ள சி.சி.எப்.எனப்படும் சிறுவர்களுக்கான கிறிஸ்தவ நிதியம், இடம் பெயர்ந்துள்ள சிறுவர்கள் நிறைகுறைவுக்கும் போசனைக் குறைப்பாட்டு நோய்க்கும் ஆளாகி வருவதாக சுட்டிக் காட்டியுள்ளது.

இது தொடர்பாக சிறுவர்களுக்கான கிறிஸ்தவ நிதியத்தை (04 ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் தாக்குதலில் ௯ பொதுமக்கள் உயிரிழப்பு

மட்டக்களப்பு, சித்தாண்டி மற்றும் முறக்கொட்டாஞ்சேனை ஆகிய பிரதேசங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மோட்டார் தாக்குதலில் ஒன்பது பொதுமக்கள் உயிரிழந்தனர். 18 பேர் படுகாயமடைந்தனர். சித்தாண்டி மூன்றாம் வட்டாரம் மீது நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் நடத்தப்பட்ட இந்த மோட்டார் எறிகணை தாக்குதலில் இரண்டு வயது நிரம்பிய இரண்டு பெண்குழந்தைகள், 18 வயதிற்குக் கீழ்ப்பட்ட 2 சிறார்கள் உள்ளிட்ட 9 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதில் மூன்று சிறுவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. காயமடைந்தவரில் ஒருவர் மட்டக்களப்பு மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார். 8 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இதேவேளை இத்தாக்குதல் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டதென இராணுவமும், இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்டதென விடுதலைப்புலிகளும் மாறி மாறி குற்றஞ்சாட்டியுள்ளனர். (ச-3,5)

## கண்காணிப்புக் குழுவின் வேண்டுகோளை பாதுகாப்பு அமைச்சு பரிசீலிக்கின்றது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்குள்ளான கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்திற்குள் சென்று விசாரணைகளை நடத்துவதற்குத் தமக்கு இன்றுவரை அனுமதி கிடைக்கவில்லை என்று இலங்கைப் போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

எனினும் கண்காணிப்புக்குழுவின் வேண்டுகோளைப் பாதுகாப்பு அமைச்சு பரிசீலித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த திங்கட்கிழமை தாக்குதல் தொடர்பான விசாரணைகளை நடத்தச் சென்ற கண்காணிப்புக் குழுவினரை விமானப் படை அதிகாரிகள் அனுமதிக்கவில்லை.

எனவே அவர்கள்அரசாங்கத்தின் சமாதான செயலகத்தை அணுகியிருந்தனர். எமக்கு அனுமதிஅளிக்கப்பட்டால் நாம் எந்த நேரமும் அங்குப் போகத் தயார் என கண்காணிப்புக் குழுவின்பேச்சாளர் தொர்பினூர் ஓமர்சன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் வான்தாக்குதல் சேதங்களை மதிப்பிடுவதற்காக அங்கு செல்வதற்குத் தமக்கு அனுமதி தருமாறு கண்காணிப்புக் குழு கோரியுள்ளது.

இதன் மூலம் இத் (04 ஆம் பக்கம் பார்க்க)

## டில்லியில் முக்கிய பேச்சு ஜனாதிபதி மகிந்த திட்டம்

(கொழும்பு)

புதுடில்லியில் நடைபெறும் சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியா வரும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இராஜதந்திர ரீதியிலான முக்கிய பேச்சுக்களில் ஈடுபட உத்தேசித்துள்ளதாக பல்வேறு இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்போது பிரதமர் மன்மோகன் சிங், வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ள மகிந்த ராஜபக்ஷ, இம் மாநாட்டில் பார்வையாளர்களாக கலந்து கொள்ளும் அமெரிக்க, சீன மற்றும் ஜப்பான் தூதுவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் அதிகரித்துச் செல்லும் வன்முறைகள், அண்மையில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலின் பின்னர் எழுந்துள்ள சவால்கள், மாறியுள்ள நிலைமைகள் தொடர்பாக இந்நாடுகளுக்கு தெளிவுபடுத்தும் மகிந்த ராஜபக்ஷ இச்சவாலை சமாளிப்பதற்கு இலங்கைக்கு ஆதரவளிக்குமாறு கோருவாரென எதிர்பார்க்கப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கிளைமோர்த் தாக்குதல் ஐந்து இராணுவத்தினர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா பறையனாலங்குளத்தில் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பறையனாலங்குளம் அருகே நேற்றுப் பிற்பகல் 12.20 மணியளவில் உழவு இயந்திரத்தில் சுற்றுக்காவலுக்குச் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதுடன் (04 ஆம் பக்கம் பார்க்க)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

## சொந்த மண்ணில் மேற்கிந்திய தீவுகள் அணி மீண்டும் தோல்வி; நியூசிலாந்து அபார வெற்றி

நியூசிலாந்து அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற மேற்கிந்திய தீவுகள் மீண்டும் சொந்த மண்ணில்தோல்வியடைந்து அரையிறுதிக்கு செல்லும் வாய்ப் பை நழுவ விடும் நிலையில் மேற்கிந்திய தீவுகளில் நடை பெற்றுவரும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர்ரின்,நேற்று முன்தினம் அன்ரிக் குவாலில் நடைபெற்ற சூப்பர் 8 ஆட்டத்தின் 3 ஆவது போட்டியில் நியூசிலாந்து - மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணித் தலைவர் ஸ்ரிபன் பிளமங் முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி நியூசிலாந்து அணி யின் பந்து வீச்சாளர்களுக்கு ஈடுகொடுக்க முடியா மல் 44.7 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களை யிழந்து 177 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இதில் துடுப்பாட்டத்தில் சிறிஸ் ஹைஸ் 44 ஓட்டங்களையும் அணித்தலைவர் பிரைன் லாரா 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக பொன்ட், ஜேக்கப் ஓரம், விக்டோரி ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். குறிப்பாக விக்கெட் காப்பாளர் மக்குலம் 4 பிடிகளை எடுத்த மை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து 50 ஓவர்களில் 178 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெ டுத்தாடிய நியூசிலாந்து அணி, ஸ்ரைரிஸ், மக்மில னின் பிரிக்கப்படாத 4 ஆவது விக்கெட் இணைப் பாட்டமாக 100 ஓட்டங்களால் 39.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 179 ஓட்டங்க ளைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் துடுப்பாட்டத்தில் ஸ்ரைரிஸ் ஆட்டமிழக் காமல் 80 ஓட்டங்களையும் ஸ்ரீபன், பிளமிங் 45 ஓட்டங்களையும் மக்மிலன் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் மேற்கிந்திய தீவுகள் அணி சார் பாக பவல் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இவ்வெற்றியுடன் நியூசிலாந்து அணி லீக் போட் டியில் போனஸ் புள்ளி 2 உடன் மொத்தம் 4 புள்ளிக ளுடன் அவுஸ்திரேலியாவுக்கு அடுத்த படியாகவும் இலங்கை அணி 2 புள்ளிகளுடன் 3வது இடத்தி லும் தென்னாபிரிக்கா 2 புள்ளிகளுடன் 4ஆவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இல. கிரிகெட் ரசிகர்கள் நிதானமானவர்கள்

### புகழ்கிறார் சங்கக்கார

இந்திய அணி மீது ரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்பே தோல்விக்கு காரணம் என இலங்கை அணியின் உபதலைவர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ணத் தொடரிலிருந்து இந்தி யா வெளியேறியது குறித்து பேட்டி ஒன்றில் கருத்துத் தெரிவித்த குமார் சங்கக்கார, இந்திய அணி மீது தற்போது கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. ரசிகர்களது எதிர்பார்ப்பு இந்திய வீரர்க ளுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இந்திய-பாகிஸ்தான் அணிகளில் நான் இடம் பெறாதது எனது அதிர்ஷ்டம் என அவர் குறிப் பிட்டுள்ளார்.

இலங்கை ரசிகர்கள் சற்று நிதானமானவர்கள். தோல்வி குறித்து விமர்சனங்கள் எழுமே தவிர வேறு ஏதும் நடக்காது. வீரர்கள் வீடுகள் மீது தாக்குதல் ஏதும் நடக் காது. எமது பாதுகாப்பு விஷ யத்திலும் பிரச்சினை ஏதும் இருக்காது என்று மார்பு தட்டி னார் குமார் சங்கக்கார. (ச-5)

அனுசரணை:-




## யாழ்.செயலகத்தில் நாளை கூட்டம்

புதுவருடத்திற்கான பொருள் விநியோகம் தொடர்பான கூட்டமொன்று நாளை ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். செய லகத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்திற்கு பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் மற் றும் பொது முகாமையாளர்கள் தவறாது கல ந்து கொள்ளுமாறு அரச அதிபர் அறிவித் துள்ளார்.

கூட்டத்திற்கு சமுகமளிக்கும் போது தற் போதைய பொருள் இருப்பு நிலைவரம் தொடர்பான அறிக்கையையும் கொண்டு வருமாறு கோரப்பட்டுள்ளது. (ச)

## உரும்பிராய் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் தினமும் பரிசில் நாளும்

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் ஸ்தா பகர் தினமும் பரிசில் நாளும் எதிர்வரும் 3ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கல்லூ ரிப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

கல்லூரி முதல்வர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொரு ளாளரும் சுன்னாகம் இலங்கை வங்கியின் முன்னாள் முகாமையாளருமான செ.நாக ரத்தினமும் அவரது பாரியாரும் பிரதம விருந் தினராக கலந்து கொள்கின்றனர். சிறப்பு விருந்தினராக கோப்பாய்க் கோட்டக்கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம் கலந்து கொள்கிறார். (ச)

## போயா ஆன்மிக நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் போயா ஆன்மிக நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவை யுடன் நிறைவுபெறும். (ச)

## ஒப்பந்தம் கைச்சாத்தான பின்பும் இராணுவபலம் அதிகரிக்கப்பட்டது

### ஐ.தே.கட்சி சுட்டிக்காட்டு

போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னரும் கூட பாதுகாப்பு படைத்தரப்பினின் படைப்பலத்தை அதிகரிக்க தாம் நடவடிக் கைகளை மேற்கொண்டதாக ஐக்கிய தேசி யக் கட்சி தெரிவித்துள்ளது.

தமது ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவி டம் இருந்து வாங்கப்பட்ட யுத்தக் கப்பல் இப் போதும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் சாகல ரட்ணநாயக்க தெரிவித்தார்.

அந்த காலப்பகுதியில் இராணுவத்தின ரால் கோரப்பட்ட ஆயுதங்கள் மற்றும் அவர் களுக்கு உரிய பயிற்சிகளும் வழங்கப்பட்ட தாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் விமான பலம் இருப்பதாக அறிந்த காலப்பகுதியிலே யே விமானங்களை தாக்க கூடிய ஆயுதங் களை இந்தியாவிடம் இருந்து பெற நடவடி க்கைகளை மேற்கொண்டிருந்தோம் என அவர் நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்று கையிலேயே அவர் இக்கருத்துக்களை தெரி வித்துள்ளார்.

தமது ஆட்சிக் காலப்பகுதியில் அரசியல் கலப்பில்லாத வகையில் நாட்டின் பாதுகாப் பை உறுதி செய்து வந்தோமே அன்றி இந்த அரசாங்கம் செய்வது போல ஊடகங்களின் ஊடாக யுத்தம் செய்யவில்லை என நாடா ளுமன்ற உறுப்பினர் சாகல ரட்ணநாயக்க மேலும் கூறினார். (ச-3)

## விரிவுரைகளுக்கு சமுகமளிக்க பதிவாளர் கோரிக்கை

வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழக த்தின் 2005/2006, 2006/2007 ஆம் கல் வியாண்டுகளுக்கான விரிவுரைகள் விரை வில் ஆரம்பமாகவுள்ளன. இக்கல்வியாண் டுகளுக்கு அனுமதி பெற்ற மாணவர்கள் உரிய திகதிகளில் தத்தமது இடங்களில் வகுப்புக்க ளுக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர். விபரங்கள் தேவைப்படின் தத்தமது பீடாதிபதிகளுடனோ அல்லது 065 2240584 என்ற தொலைபேசி இலக்கத்தில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்களுடனோ தொ டர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (ச)



கடந்த 21ஆம் திகதி பலாலி ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்ற சுவாமி விவே கானந்தர் கண்காட்சியை கலாசாலை அதிபர் த.காங்கேசபிள்ளை மங்கல விளக் கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் பருத்தித்துறை இராமகிருஷ்ண சாரதாதேவி சேவாச்சிரம தலைவர் சுவாமி சித்ரூபானந்தா மற்றும் கல்லூரி மாணவிகளைப் படத்தில் காணலாம்.

## மீனவர் மீதான தாக்குதலை கண்டித்து தூத்துக்குடியில் உண்ணாவிரதம் ஆரம்பம்

தமிழகம் கன்னியாகுமரியருகே கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் அதனைக் கண்டித்து மீனவ மக்கள் கட்சி மாநிலத் தலைவர் அலங்காரப்பரதர் தூத்துக்குடியில் நேற்று உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள் ளார்.

கச்சதீவை மீண்டும் இந்தியா பெற வேண்டும். இந்திய அரசாங்கம் தமிழக மீனவர்களை காப்பாற்ற உறுதியான நடவடி க்கை எடுக்க வேண்டும் போன்ற கோரிக் கைகளை முன்வைத்து அவர் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற் கொண்டுள்ளார்.

கடந்த 1983ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை 255 தமிழக மீனவர்கள் கடலில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக தமிழ கச் செய்திகள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் மாலை இலங்கைப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டில் 5 மீனவர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத் தக்கது. (எ-3)

## பொருளாதாரம் வளர்ச்சி கண்டுள்ளது புள்ளி விபரத் திணைக்களம் தகவல்

இலங்கையின் கடந்த வருட பொருளா தார வளர்ச்சி 2005ஆம் ஆண்டுடன் ஒப்பி டும் போது 1.5 வீதத்தால் அதிகரித்துள்ள தாக புள்ளி விபரவியல் திணக்களத்தின் பணிப்பாளர் சுரஞ்சன் வித்யாரத்ன தெரி வித்துள்ளார்.

கடந்த வருடத்தினதும் இவ்வருடத்தின் மூன்று மாதங்களினதும் பொருளாதார நிலைமைகள் பற்றி விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு தகவல் திணைக் கள கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே இவ்வாறு கூறினார். மேலும் அவர் தெரிவிக் கையில்;

இந்த வளர்ச்சியானது விவசாயம், கைத் தொழில் மற்றும் சேவைகள் ஆகிய துறை களிலேயே அதிகளவு ஏற்பட்டுள்ளது. அதே போன்று தேசிய உள்நாட்டு மொத்த உற்பத் தியும் 2006ஆம் ஆண்டு 7.7 வீதமாக அதி கரித்துள்ளது. இது 2005 ஆம் ஆண்டில் 6.1 வீதமாக காணப்பட்டது.

கைத்தொழில் 8.4 வீதமும் சேவைகள் துறை 7.8 வீதமும் விவசாயம் 6.1 வீதமும் வளர்ச்சி கண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவோர் அடையாள அட்டைகளை பெறவேண்டும்

### ஆட்பதிவுத் திணைக்களம் வேண்டுகோள்

ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள கல்வி பொது தராதர உயர்தர பரீட்சைக்குத் தோற்ற வுள்ள மாணவர்கள் தேசிய அடையாள அட் டையைப் பெறுவதற்காக விண்ணப்பித்து முன்கூட்டியே அதனைப் பெற்றுக் கொள்ளு மாறு ஆட்பதிவு திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தவதற் காக தேசிய அடையாள அட்டையை சமர்ப் பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை அண்மித்தும் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை ஆட்பதி வுத் திணைக்களத்துக்கு அனுப்புவதன் மூல மும் திணைக்களமும் பரீட்சார்த்திகளும் எதிர் நோக்கும் பிரச்சினைகளை தவிர்க்கும் வகை யில் முன்கூட்டியே அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆட்பதிவுத் திணைக் கள ஆணையாளர் ஏ.ஜி.தர்மதாச பாடசாலை அதிபர்களையும் மாணவர்களையும் கேட்டுள் ளார்.

இதன். பிரகாரம் பாடசாலை மாணவர் களுக்கான விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்கள் நேரடியாக ஆட்பதிவுத் திணைக் களத்திற்கு அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

1968ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் 16 வயதைப் பூர்த்தி செய்துள்ள சகல பாடசா லை மாணவர்களுக்கும் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் அறிவித்துள்ளார் (ச-5)

மனிதனாய் பிறந்தவன் ஏதேனும் ஒரு காரியம் செய்யப் புகும் போது, நற்செயலோ, தீச்செயலோ தர்மநெறியில் நிற்பவன் செய்யத் தகுந்த காரியமா என்பதை மட்டும் பார்க்க வேண்டும்.

—சாக்ரட்டீஸ்

வலம்புரி

# பயங்கரம் தரும் கொலைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்

இலங்கையில் அமைதி ஏற்பட வேண்டும் என்ற கோரிக்கை வெறும் வாய்மொழியாக இருக்கின்றதேயன்றி காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் இல்லை என்றே கூற வேண்டும்.

நாளுக்கு நாள் மனித உயிர்கள் அழிக்கப்படுகின்ற துயரம் நீண்டு செல்கின்றது. ஒவ்வொரு விடியலிலும் ஏதோ ஒரு துயரச் செய்தியை கேட்கும் பரிதாபமே இந்த மண்ணில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

மனிதக் கடத்தல், கொள்ளை, கொலை, காணாமல் போதல் என்ற நிட்டூழியத்தின் மூலமாக கடந்த ஏழு மாதங்களில் நூற்றுக்கு மேற்பட்டவர்களின் வாழும் உரிமை மறுக்கப்பட்டு விட்டது. எனவே இத்தகைய துயரங்களைத் தடுப்பதாயின் 'சமாதானம்' என்பதை தவிர வேறுவழி இருக்க முடியாது.

அரசும் விடுதலைப்புலிகளும் உடனடியாக சமாதானப் பேச்சு வார்த்தையில் ஈடுபடவேண்டிய கட்டாயம் இப்போது ஏற்பட்டுள்ளது. சமாதான முன்னெடுப்புக்களின் காலதாமதங்கள், மனித அவலத்தையும், துயரத்தையுமே தருவனவாக இருக்கும்.

கொலை என்பது பிரச்சினைக்கான தீர்வாக மாட்டாது. அதுவே பிரச்சினைக்கான தீர்வாக இருக்குமாயின் இந்த உலகம், ஓர் அறிவும் ஐந்தறிவும் படைத்தவற்றின் வாழ்விடமாக இருந்திருக்க முடியுமேயன்றி மனிதத்தின் வாழ்விடமாக இருப்பதற்கு எவ்வகையிலும் பொருத்துடையதாகாது.

கொலை சம்பவங்கள் பழிதீர்க்கும் நோக்கில் அல்லது பிழையான முடிபுகளின் அடிப்படையில் இடம் பெறுகின்றது போல் தெரிகின்றது. ஒருவரின் கொலை அவரின் மனைவியை விதவையாக்கலாம், பிள்ளைகளை அநாதைகளாக்கவும் செய்து விடுகின்றன.

குடும்பத் தலைவனை இழந்த குடும்பத்தின் எதிர்கால சீவியம் எத்தகையது என்பதை இலங்கை மண்ணில் வாழும் எவரும் புரிந்து கொள்வதில் அதிக தடைகள் இருக்க முடியாது. எனவே கொலைச் சம்பவங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இந் நாட்டில் இடம் பெறும் ஒவ்வொரு கொலைச் சம்பவங்களும் சமாதானத்தின் தூரத்தை நகர்த்தி செல்வதுடன், சமாதானம் ஏற்படுமாயின் அதன் நிலைத்த தன்மைக்கும் பங்கமாகவே அமையும்.

உலகின் கடந்த கால அனுபவங்களையும், வரலாறுகளையும் நோக்கும்போது போரின் பின் ஏற்பட்ட சமாதானங்கள் நின்று நிலைக்க முடியாமல் போனதை கண்டு கொள்ள முடியும்.

இவ்வாறு போருக்கு பின்பான சமாதானம் நின்று நிலைக்க முடியாமைக்கான காரணம் போரினால் பாதிக்கப்பட்டவர்களில் ஒரு சிலர் பழிவாங்கும் எண்ணத்தை வளர்த்துக் கொண்டமையாகும்.

அதிலும் கொலை நிகழ்ந்தபோது சிறுவர்களாக இருந்தவர்கள் பிற்காலத்தில் வக்கிர உணர்வு கொண்டவர்களாகவும், மனிதத்தை மதியாதவர்களாகவும் மாறினார்கள்.

எனவே இலங்கை அரசு இந்நாடு ஒரே நாடாக- சமாதான நாடாக அனைத்து இன மக்களும் சமஉரிமை பெற்று வாழக்கூடிய நாடாக இருக்க வேண்டும் என விரும்பினால்,

இலங்கை பூராகவும் இடம்பெறும் கொலைச் சம்பவங்களை நிறுத்துவதற்கான நடவடிக்கையை முதலில் எடுத்தாக வேண்டும்.

# நாடாளுமன்றத்திற்குப் பாதுகாப்பு வழங்கக்கோரி சபாநாயகருக்கு கடிதம்

நாடாளுமன்ற அமர்வுகளின் போது அல்லது வாக்கெடுப்பின் போது தமிழீழ விடுதலைப்புலிகளால் வான் தாக்குதல் நடத்தப்பட்டால் பேரழிவு ஏற்பட்டு விடும். எனவே சபாநாயகர் அதற்கான தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமென்று தேசிய பாரம்பரிய அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.பண்டாரவுக்கு அநுரா பண்டாரநாயக்க எழுதிய கடிதத்தில் இதனைத் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நான் நான்கு நாள்களுக்கு முன்னர் கட்டுநாயக்காவில் இடம்பெற்ற பயங்கரமான, எதிர்பாராத வான் தாக்குதல் தொடர்பாக உங்களுக்கு எழுதுகின்றேன். அவசரகாலச் சட்ட விதிகளின் விவாதங்களின்போது சேறடிக்கும் வேலைகளில் நேரத்தை வீணடிப்பதை விட்டுவிட்டு ஜனாதிபதி, முப்படைத் தளபதிகள் ஆகியோருடன் கலந்தாலோசித்து நாடாளுமன்றத்தின் பாதுகாப்பை அதிகரிக்க முயற்சிகளை எடுக்க வேண்டும்.

எனது கருத்துக்கள் யாரையும் தூண்டி விடுவதல்ல. ஆனால் உண்மையான நிலைமைகளை ஆராய வேண்டும். மீண்டும் அது இடம்பெறாது தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். உலகின் வான் படையுள்ள ஒரே ஒரு தீவிரவாத இயக்கம் விடுதலைப்புலிகளே.

எனவே அவர்களின் விருப்பப்படி அவர்கள் அதனைப் பயன்படுத்தலாம். விடுதலைப்புலிகள் சிறப்பு இலக்குக்களை தெரிவுசெய்வதுண்டு. நாடாளுமன்றமும் அவர்களின்இலக்குகளில் ஒன்று. எனவே மோசமான விளைவுகளைச் சந்திக்க முன்னர் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நீங்கள், ஜனாதிபதி, முப்படைத் தளபதிகள் ஆகியோருடன் கலந்தாலோசித்து நாடாளுமன்றத்தின் பாதுகாப்பை நாடாளுமன்றம் கூடும் வேளைகளில் அதிகரிக்க முயற்சிகளை எடுக்க வேண்டுமென நான் கருதுகின்றேன். எனவே எல்லாக் கட்சிகளையும் அழைத்து உங்களால் எடுக்கப்படும் திட்டங்களை உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தின் முக்கிய பிரதிநிதி நீங்கள். எனவே நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் ஏன் உங்களின் உயிருக்குக் கூட நீங்களே பொறுப்பு. முழுநேரமும் நாம் வாகனக் குண்டுகளையே எதிர்பார்த்தோம் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஏ-1)

# விடுதலைப்புலிகள் இலங்கைக்கு மட்டுமல்ல உலக நாடுகளுக்கே அச்சுறுத்தலாக உள்ளனர்

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரை

(கொழும்பு)

பயங்கரவாதத்தை ஒழிக்கும் அரசாங்கத்தின் வேலைத் திட்டம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை மக்களிடம் உள்ளது. இருப்பினும் என்னை தவறிழைக்கச் செய்வதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். கட்டுநாயக்க விமானப்படைத் தளம்மீது புலிகள் தாக்குதல் நடத்தியதும் எங்களை பதவி விலகுமாறு இத்தகையவர்கள் கூறுகின்றனர் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எம்மை பதவி விலகுமாறு கோருபவர்கள் மிக் ரக விமானங்கள் குறித்தான தகவல்களை வெளியிட்டு புலிகளுக்கு உதவி புரிகின்றனர். பிரபாகரனின் மொழியும் இன்று இந்த நாட்டின் சிலரின் மொழியும் ஒன்றாகிவிட்டது. புலிகள் இந்த வலயத்துக்கு மட்டுமல்ல முழு உலகத்திற்குமே அச்சுறுத்தலாக உள்ளனர் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

மீரிகமையில் ஜாதிக சவிய வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வுக்காக அலரிமாளிகையில் இருந்து நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செய்மதி ஊடாக உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

பொருட்களின் விலை உயர்வை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். நீங்கள் நாட்டைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று மக்கள் என்னிடம் நேரடியாக கேட்டுக் கொண்டுள்ளனர். இருப்பினும் என்னை தவறிழைக்கச் செய்வதற்கு சிலர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

அனைவரும் ஒரு சிலரையே இலக்கு வைக்கின்றனர். என்னை தவறிழைக்க தூண்டுவதாக நினைத்துக் கொண்டு தாய் நாட்டுக்கும் மக்களுக்குமே சிலர் துரோகம் செய்கின்றனர். அன்று உலக வர்த்தக நிலையம் மற்றும் பெண்டகன் மீது தீவிரவாதிகள் விமானத் தாக்குதல் நடத்தியதும் பயங்கரவாதத்தை ஒடுக்க வேண்டும் என்ற கருத்து உலகளாவிய ரீதியில் நிலவியது.

அரசியல் பேதமின்றி அமெரிக்காவே அதற்கு உடன்பட்டது. இன்று புலிகள் விமானத்தில் வந்து விமானப் படை மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதன் மூலம் ஒரு விடயம் தெளிவாகின்றது. அதாவது புலிகள் இந்த வலயத்திற்கு மட்டுமல்ல முழு உலகத்திற்குமே அச்சுறுத்தலாக உள்ளனர்.

தாக்குதல் நடத்துவதால் அச்சமடைந்து ஆட்சி உடைந்து விடும் என்று யாராவது நினைத்தால் அது தவறாகும். பயங்கரவாதத்தை அழிக்கும் வேலைத்திட்டத்தை மட்டும் நாங்கள் மேற்கொள்ளவில்லை.

நாட்டை முன்னேற்றும் வேலைத் திட்டங்களையும் ஆரம்பித்துள்ளோம். வீரவில விமான நிலையம், கொழும்புத் துறைமுகம், காலித் துறைமுகம், அனல்மின் நிலையங்கள் என அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

பயங்கரவாதத்தை ஒழிக்கின்ற அதேவேளை வரலாற்றைக் கொண்ட இந்த நாட்டின் கலாசாரத்தையும் நாங்கள் பாதுகாப்போம். வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மலையகம் என முழு இலங்கையையும் நாங்கள் அபிவிருத்தி செய்வோம் என ஜனாதிபதி தெரிவித்தார். (ச-5)

# ஆயுதப் போராட்டங்களை பேச்சு மூலம் தீர்க்க வேண்டும்

## நேபாளத்தில் தீர்மானம் நிறைவேற்றம்

தெற்காசியாவில் இடம் பெறும் போராட்டங்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்க்கப்படவேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நேபாளத் தலைவர் ஹாத்மண்டுவில் இடம்பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்மேளனம் ஒன்றிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

கடந்த 24 ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை இடம் பெற்ற இச் சம்மேளனத்தில் இலங்கையின் சார்பாக அமைச்சர் டி.பி.எக்கநாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேஷன், சுரேஸ் பிரேமச்சந்திரன், தயா சிறி ஜெயசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது தவிர இச் சம்மேளனத்தில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

இதேவேளை பாக்குநீரிணையின் ஊடாக தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கடத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடாத்த கடற்படையில் உயர் மட்டக் குழு ஒன்று இந்தியா சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் பொழுது இந்திய மீனவர்கள் நான்கு பேர் நேற்று முன்தினம் கொல்லப்பட்ட விடயம் தொடர்பாகவும் ஆராயப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-3)

# விமானத் தாக்குதலை விசாரிக்க பாராளுமன்ற குழுவை நியமிக்கவும்

## ஐக்கிய தேசிய கட்சி வலியுறுத்தல்

கட்டுநாயக்க விமான படைத்தளத்தின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட விமான குண்டு வீச்சு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு பாராளுமன்ற தெரிவுக் குழுவை நியமிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாகல ரட்ணநாயக்க கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது;

ராடர் கருவிகள் தொடர்பாக பயிற்சி அளிப்பதற்கு இந்தியா- இலங்கை விமானப்படை வீரர்களுக்கு அழைப்பு விடுத்தபோதும் அந்தப் பயிற்சியில் தேவையான வீரர்கள் கலந்து கொள்ளவில்லை. அத்துடன் இரகசிய விமானம் தொடர்பாக படையினர்களுக்கிடையே உள்ளூர் தொடர்புகள் இல்லை. குறித்த ராடர் கருவி தொடர்ந்து இயங்குகின்றதா? அல்லது பகல் வேளையில் மட்டும் இயங்குகின்றதா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

விடுதலைப்புலிகளிடம் விமானங்கள் இருப்பதாக இந்திய றோ அமைப்பு 1998 ஆம் ஆண்டு தெரிவித்து. அத்துடன் 2006 ஆம் ஆண்டு இலங்கை படையினர் அதனை உறுதிப்படுத்தினர். இந்நிலையில் அதற்கு எதிரான எவ்வாறான நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

1989இற்கும் 2007 இற்குமிடையிலான காலப் பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி செய்த காலத்தில் இலங்கையில் சமாதானம் நிலவியதால் ராடர் கருவிகள் குறித்து நாம் கூடிய அக்கறை செலுத்தவில்லை என்றாலும் யுத்தம் தொடர்பாக இந்திய அரசாங்கத்திற்கு தெளிவுபடுத்தியுள்ளோம். (ச-5)

# துப்பாக்கியால் அச்சுறுத்தி வர்த்தகரிடம் பணம் கொள்ளை

## யாழ்.நகர மத்தியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர மத்தியில் வைத்து வர்த்தகர் ஒருவரிடம் ஆயுத முனையில பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

வங்கி ஒன்றிலிருந்து 5 லட்சம் பணத்தை பெற்றுக் கொண்டு திரும்பும் போது நேற்று மதியம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி பணத்தை அபகரித்துச் சென்றதாகக் கூறப்பட்டது.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரே பணத்தை பறி கொடுத்துள்ளார். (ச-3)

# புலிகளின் விமானங்கள் குறித்து கூடிய கவனம் செலுத்தப்படும்

## அமெரிக்கா தெரிவிப்பு

விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதலும் அவர்கள் விமானங்களை வைத்திருப்பதும் மிகவும் கவனத்திற்குரியதொரு விடயமென்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளெக் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தனது வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புக்கள் பட்டியலில் விடுதலைப்புலிகளை 1997 ஆம் ஆண்டு சேர்த்துக் கொண்டதை நினைவுபடுத்திய தூதுவர், அன்று முதல் இலங்கை அரசாங்கத்தோடு இணைந்து புலிகளின் ஆயுதம் மற்றும் நிதி சேகரிப்பு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்காக அமெரிக்கா செயற்பட்டு வருகின்றது என டெல்லி நியூஸ் பத்திரிகைக்குக் கூறியுள்ளார். (ச)

## கண்காணிப்புக்...

தாக்குதல் தொடர்பான கருத்துக்களைக் கூறலாம். போர் நிறுத்த சரத்து 3.10 இன்படி தமது கடமையைச் செய்வதற்காகக் கண்காணிப்புக் குழுவின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்கள் அனுமதி வழங்கவேண்டுமென கண்காணிப்புக் குழுவினர் கூறியுள்ளனர். (ச-5)

## கிழக்கு...

மேற்கோள்காட்டி ராய்ட்டர் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பில் இடம்பெற்ற மோதல்கள் காரணமாக லட்சக்கணக்கான மக்கள் தமது வீடுகளிலிருந்து வெளியேறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

பின்னர் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட வாகரைப்பகுதியில் 150 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டன.

எனினும் இடம் பெயர்ந்துள்ளோர் தங்கியுள்ள நலன்புரி முகாம்களிலும் சிறுவர்கள் மிக மோசமாக பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

அங்கு பாரியளவில் உணவுப் பற்றாக்குறை நிலவுகின்றது. ஒரு இறாத்தல் பாண் பகிர்ந்தளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (ச)

## வவுனியாவில்...

மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

படுகாயமடைந்த இராணுவத்தினர் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதேவேளை சம்பவ இடத்தைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் தேடுதல் நடத்தியதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-3,5)

## விமானக் குண்டு வீச்சின்...

பதற்காகவே சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஐவர் கொண்ட குழுவை நியமித்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளது. இவ்விரண்டின் மீதும் எங்களுக்கு நம்பிக்கையில்லை என்பதுடன் சம்பவ இடத்திற்கு ஊடகங்கள் மற்றும் கண்காணிப்பு குழுவை அனுமதிக்காதது ஏன்? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது,

விமான படைத்தளத்தின் மீது புலிகள் விமான தாக்குதலைகளை மேற்கொண்டதை அடுத்து நாட்டின் பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பாக விவாதிப்பதற்காக பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற வகையில் பாராளுமன்றத்தை கூட்டுமாறு கேட்டோம். அரசியலமைப்பின் (4) (அ) பிரிவிற்கேற்ப நாட்டின் பாதுகாப்பு குறித்து ஜனாதிபதியிடம் கேள்வி கேட்பதற்கு பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இருக்கின்றது. அதேபோல அரசியலமைப்பின் 42ஆம் பிரிவின் பிரகாரம் நாட்டின் மக்களின் பாதுகாப்பு தொடர்பாக ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்பு கூறவேண்டும் என்றார். (ச)

# சர்வதேச சட்டங்களை மதித்தே அரசாங்கம் செயற்படுகின்றது

## ஊடக அமைச்சர் தெரிவிப்பு

சிறுவர்களைப் படையில் சேர்ப்பதற்கு நாம் யாருக்கும் இடமளிக்கவில்லை. சிறுவர்களைப் படையணியில் வைத்திருப்பது சட்டப்படி குற்றமாகும். அரசாங்கம் சர்வதேச சட்டத்தை எப்பொழுதும் மதித்தே செயற்பட்டு வருகிறதென ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு, ஊடகவியலாளர் ஒருவரின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது;

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீதான புலிகளின் விமானத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்தவென ஐவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் முழுமையான அறிக்கை கிடைக்கும் வரை எதனையும் பிரஸ்தாபிக்க முடியாது. விமானப் படைத் தளபதியினால் நியமிக்கப்பட்டுள்ள இக்குழு மிக விரைவில் அறிக்கையினை சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

நாட்டின் தேசிய பாதுகாப்பு குறித்து ஊட கவியலாளர்கள் எழுப்பும் எல்லாக் கேள்விகளுக்கும் எம்மால் விடையளிக்க முடியாது. அவ்வாறு விடையளிப்பதாவது பயங்கரவா திகளுக்கு நாம் தகவல் வழங்குவதாக அமை ந்து விடும். விமானப் படைத் தளத்தின் மீதான தாக்குதலையடுத்து புதிய பாதுகாப்பு ஏற்பாடு கள் பல முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன் ஒரு அங்கம்தான் 116 அவசர அழைப்புக்கான தொலைபேசி இலக்கமா கும். சந்தேகத்திற்கிடமான எந்த விமான தைக் கண்டாலும் இந்த இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை வழங் கலாம். அந்த விமானம் சிலவேளை இரா ணுவத்துடையதாகவும் இருக்கலாம். சந்தே கம் எழுந்தால் இந்த இலக்கத்தின் மூல அறியப்படுத்துங்கள் எனவும் அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

## டில்லியில்...

படுகின்றது.

இம்மாநாட்டில் சீனா, ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர்களும் அமெரிக்க மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் றிச்சட் பௌச்சரும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## நீர்மூழ்கிக்...

பிரதீப்ஜௌஹரான்கருத்துதெரிவிக்கையில்

நீர்மூழ்கிக் கப்பலை வாங்குவது எளிது ஆனால் சொந்தமாக உருவாக்குவது மிக வும் கடினமான செயல். நீர்மூழ்கிக் கப்பல் களின் இயக்கம் தொடர்பான விளக்கப் புத் தகத்தை வைத்து நீர்மூழ்கிப் கப்பலை வடி மைத்து உருவாக்கி விட முடியாது.

நீர்மூழ்கிக் கப்பலை விடுதலைப் புலிகள் வாங்குவார்களா? அல்லது உருவாக்குவார் களா? என்பதை முழுமையாக புறக்கணிக் கவும் முடியாது.

நீர்மூழ்கிக் கப்பலை வடிவமைத்து உரு வாக்க ஒரு சில நாடுகளால் மட்டுமே முடி யும். அரசு அல்லாத வேறு எந்த அமைப்பும் நீர்மூழ்கிக் கப்பலை உருவாக்கியுள்ளதாக இதுவரை தகவல் ஏதும் இல்லை.

இந்தியப் பகுதிக்குள் விடுதலைப்புலிகள் ஊடுருவாமல் தடுக்க பாக்.ஜலசந்தி மற்றும் அருகாமை கடல் பகுதிகளில் கடற்படை ரோந் துப் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ கத்தில் ராமநாதபுரத்தில் கடற்படை தளம் அமைக்கும் பணியும் தீவிரப்படுத்தப்பட் டுள்ளது என்றார். (ச)

## நடைமுறை...

இந்த நடைமுறையின் கீழ் அனைத்து பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவுள்ளன.

இதுதவிர வீதிச் சோதனைகள் மற்றும் ரோந்து நடவடிக்கைகள் ஆகியனவும் விஸ் தரிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். இந்த நடவடிக்கைக்கு பொதுமக்கள் ஒத் துழைப்பை வழங்குமாறு பிரதிப் பொலிஸ் மா அதிபர் வேண்டியுள்ளார்.

சந்தேகத்திற்கிடமான பொதிகள் மற்றும் சந்தேக ஆள் நடமாட்டங்கள் தொடர்பில் என்ற அவசர பொலிஸ் பிரிவு தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல் தருமாறு மக்கள் வேண்டப்பட்டுள்ளார்கள்.

இதுதவிர சந்தேகத்திற்கிடமான விமா னங்கள் வான்வெளியில் அவதானிக்கப்படும் பட்சத்தில் அது தொடர்பான தகவல்களை 116 என்ற விமானப் படைப் பிரிவின் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறி விக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பாக சமய ஸ்தலங்கள், புகையிரத நிலையங்கள், பயணிகள் பேருந்து நிலை யங்கள் மற்றும் பொதுமக்கள் நடமாடும் அங்காடிகள் ஆகியவற்றில் பாதுகாப்பை அதிகரிக்க விசேட செயற்றிட்டமொன்றும் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப் பிட்டார்.

இதற்காக பொலிஸாரும் சிவில் உடை யில் உள்ள பொலிஸாரும் இராணுவத்தின ரும் ஈடுபடுத்தப்படவுள்ளதாகப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயந்த விக்கிரமரட்ண மேலும் கூறியுள்ளார். (ச-3)

## விடுதலைப்புலிகளின் விமானப் படையால்...

அச் செவ்வியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, விமானப் படை எமது மண் மீது தொடர்ச்சியான குண்டுத் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கின்ற சூழலில் அதன் மீது பதில் நடவடிக்கை ஒன்றை நடாத்தி அதனைச் செயலிழக்கச்செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டது.

அதனால்தான் விமானப் படையை பயன்படுத்தி இத் தாக்குதலை மேற்கொண்டிருந்தோம்.எம்மைப் பொறுத்தவரையில் எமது சுதந்திரப் போராட்டத்தில் இதுஒரு மைல் கல்லாகவே இருக்குமென நான் கருதுகின்றேன்.

இது ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அவர்களுடைய வலிமையை அதிகரித்திருக்கின்றது. இந் நிகழ்வு சிங்கள தேசத்தவர்களுக்கும் இனவாதத் தலைவர்களுக்கும் ஒரு தெளிவான செய்தியைக் கொடுத்திருக்கும் என்றே நம்புகின்றேன்.

சாதாரண சிங்கள மக்களை நாம் எப்போதுமே இலக்கு வைக்கப் போவதில்லை. ஒருபோதும் நாம் எமது விமானப் படைத் தளம், விமானங்கள் உள்ளது என்பதை மறுக்கவில்லை.எப்பொழுதும் அதனை நாம் ஏற்றுக்கொண்டிருக்கின்றோம். வெளிப்படுத்தி வந்திருக்கின்றோம்.

1998 ஆம் ஆண்டிலிருந்தே எமது விமானப் படையின் வளர்ச்சி ஆரம்பித்து விட்டது. இன்று ஒரு நல்ல நிலையில் அது இருக்கின்றது எனத் தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் வான் படை இந்தியாவுக்கோ ஏனைய நாடுகளுக்கோ அச்சுறுத்தலாக இருக்கப் போவதில்லை. இன்னும் சொல்லப் போனால் தமிழ் மக்களுடைய சுதந்திரம் என்பதும் அவர்களின் விடுதலை என்பதும் இந்திய தேசத்திற்கும் மிகுந்த நன்மையையும் நல்லுறவையுமே ஏற்படுத்தும். ஒருபோதும் இந்திய அரசுக்கும் மக்களுக்கும் எதிரான ஒருபோக்கை ஈழ விடுதலைப் போராட்டமோ தமிழீழ விடுதலைப் புலிகளோ கடைப்பிடிக்க மாட்டார்கள்.

தமிழர்களுடைய படைப் பலம் பெருகுவதையிட்டு எந்த அரசுமே கவலை கொள்ளத் தேவையில்லை. பதிலாக எமது படைப்பலம் பெருக்கி அதனூடாக சுதந்திமடைந்தால் அதுவே இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பூரண அமைதியைக் கொண்டு வரும் என்று நான் நினைக்கின்றேன்.

ஈழத் தமிழ் மக்கள் அவர்களுடைய அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய முழுமையான ஒரு தீர்வையே விரும்புகின்றார்கள். அது எந்த வகையில் அமைய வேண்டும்என்பது பற்றி தீர்வினை முன்வைக்கிற போதுதான் எம்மால் விமர்சனங்களை கூறக் கூடியதாகவிருக்கும்.

எங்களைப் பொறுத்தவரையில் எமது மக்கள் தங்களுடைய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் முழுமையான தீர்வை எட்டுவதற்கே எப்பொழுதும் தங்களது கோரிக்கையை முன்வைத்து வந்திருக்கின்றார்கள்.

அந்த அபிலாஷைகளுக்கு ஏற்ற வகையிலேயே எமது விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆகவே எத்தகைய தீர்வை முன்வைக்கப் போகின்றார்கள் என்பதை அறியாது நான் கருத்துக் கூறுவது பொருத்தமில்லை என்றே நினைக்கின்றேன்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டு மக்களும் ஈழத்தமிழ்மக்களும் எப்பொழுதும் தொப்புழ்கொடி உறவுகளாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். இதனை தமிழகத் தலைவர்களும் நன்குணர்ந்திருக்கின்றார்கள்.

இப் பிரசார உத்தியை எவரும்நம்பப் போவதில்லை. அத்துடன் இந்தியக் கடற்படையுடன் இணைந்து ஒரு கூட்டுக் கண்காணிப்புப் பணியில் ஈடுபடப் போவதாகக் கூறிக் கொண்டு எமக்கும் இந்தியப் படைக்கும் இடையில் மோதல் நிலையை உருவாக்கி இந்திய அரசோடு முரண்பாட்டை உருவாக்கிவிட்டு அதனால் நன்மையடைய அரசாங்கம் ஒரு சதியைச் செய்கின்றது. நிச்சயமாக இந்தச் சதிக்குள் இந்திய அரசு விழுந்துவிடாது என்றே நம்புகின்றோம்.

தமிழ் மக்களின் நலன்கருதி தமிழகத் தலைவர்களும் தமிழக மக்களும் கூட இதனை அனுமதிக்க மாட்டார்கள் என்று நான் உறுதியாக நம்புகின்றேன் என்றார் தமிழ்ச்செல்வன். (ச-5)


CCIY யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றம்

எமது மன்றத்தின் சகல அங்கத்தவர்களுக்கும்

நாளை (01.04.2007) நடைபெறவிருந்த எமது ஆண்டுப் பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினால் மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகிறோம்.

601, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

சி.உருத்திரலிங்கம்
தலைவர்

(791)







இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.03.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.